**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் நாள் வியாழன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 92/2020
CNR NO. TNTU09-002595-2020

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>வாணியம்பாடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண். 162/2019. |
| 2. | எதிரிகள் | 1. நவீத் த/பெ நசீர் பாஷா<br>**(1ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்டு சி.சி.எண்.286/2025 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது)**<br>2.அஸ்கர் அலி, த/பெ.ஜாவீத் பாஷா |
| 3. | குற்றம் | இ.த.ச. பிரிவுகள் 457, 380. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 05.04.2019 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 09.04.2019 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1&A2 - 14.04.2019 - 20.05.2019 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 28.07.2020 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | A1 & A2 - 02.07.2024 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் | - |

| | | |
|---|---|---|
| | முடிவுகள். | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – 23.07.2024<br>அ.சா.2, அ.சா.3 –02.08.2024<br>அ.சா.4–அ.சா.7–25.10.2024<br>அ.சா.8 – 15.11.2024<br>அ.சா.9 – 13.08.2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | A2 – 27.08.2026 |
| 12. | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | A2–13.02.2024–05.08.2026 |
| 13. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 27.08.2026 |
| 14. | தீர்வு | கு.வி.மு.ச. பிரிவு 248(1) ன்கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம்.

எதிரிகள் : 1. நவீத் த/பெ நசீர் பாஷா**(1ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்டு சி.சி.எண்.286/2025 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது)**

2. அஸ்கர் அலிஜாவீத் பாஷா, த/பெ.அஸ்கர் அலிஜாவீத் பாஷா

குற்றம் : இ.த.ச. பிரிவு. 457, 380.

முடிவு : இறுதியாக, இவ்வழக்கின் 2ஆம் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 457, 380 கீழான குற்றச்சாட்டானது அதன் ஆக்க கூறுகளை மெய்ப்பிக்கும் விதத்தில் தக்க சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து, 2ம் எதிரியை இவ்வழக்கில் இருந்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) ன்கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | நவீத்(1ம்எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்டு சி.சி.எண்.286/2025 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது) | நசீர் பாஷா | முஸ்லீம் | கூலி | சென்னாம்பேட்டை, வாணியம்பாடி | 32 |
| 2. | **அஸ்கர் அலி** | ஜாவீத் பாஷா | முஸ்லீம் | கூலி | கோட்டைத் தெரு, வாணியம்பாடி | 29 |

| **தேதி** | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | வழக்கு விசாரணையின் தொடக்கம் | வழக்கு விசாரணையின் முடிவு | உத்தரவு | A2– பிடியாணை நிலுவையில் இருந்தது |
| 05.04.19 | 09.04.19 | A1&A2 – 14.04.19 | A1&A2 – 20.05.19 | 02.07.24 | 27.08.26 | 27.08.26 | – |

இவ்வழக்கானது 28.07.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.08.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.ராஜி., B.A., B.L., அவர்களும் ஆஜராகி இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கில் வாணியம்பாடி நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 05.04.2019ம் தேதி இரவு 07.00 மணியளவில் ஆசிரியர் நகரைச் சேர்ந்த சாட்சி 1 நியாஸ் அகமது என்பவர் அவரது வீட்டை பூட்டிக்கொண்டு சாட்சி 2 முகமது ஜக்கி

மற்றும் அவரது மனைவியுடன் உறவினர் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்னைக்கு சென்று இருந்தபோது, எதிரிகள் இருவரும் கெட்ட நோக்கத்துடன் சுயலாபம் கருதியும் 05.04.2019ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு சுமார் 11.30 மணிக்கு பூட்டி இருந்த சாட்சி 1க்கு சொந்தமான வீட்டின் பின்பக்கமாக சென்று பின்பக்க கதவின் தாழ்பாளை 2 வது எதிரி அஸ்கர் அலி இரும்பு கம்பியால் நெம்பி உடைத்தும் எதிரிகள் இருவரும் வீட்டின் உள்ளே சென்று பிரோக்களில் இருந்த சாவிகளைக் கொண்டு திறந்தும் பணம் மற்றும் தங்க நகைகளை களவாடிச் சென்றதாகவும், 13.04.2019ம் தேதி 15.00 மணிக்கு வாணியம்பாடி பாலாற்றங்கரை முனீஸ்வரன் கோயில் அருகில் எதிரிகளை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் வழக்கின் களவு சொத்துக்களைக் கைப்பற்றியுள்ளனர். எனவே, 1 மற்றும் 2ம் எதிரிகள் இதச பிரிவுகள் 457, 380-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நிலையில் இவ்வழக்கின் 1வது எதிரியான நவீத் தலைமறைவாகி இருந்ததால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இவ்வழக்கிலிருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்டு சி.சி.எண்.286/2025 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

3. 2ம் எதிரி மீது முகாந்திரம் வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 457, 380-ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 2ம் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் 2ம் எதிரி ஆஜரானதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் 2ம் எதிரிக்கு கு.வி.மு.ச 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

4. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பு வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்தும், 2ம் எதிரி மீதான குற்ற செயல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, 2ம்

எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.25** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

6(i). அ.சா.1 நியாஸ்அகமத், இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 நியாஸ்அகமத் கடந்த 08.04.2019ம் தேதி நான் சென்னைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டு உள்ளே கதவுகளும், பீரோவும் உடைக்கப்பட்டு சுமார் 7 முதல் 8 லட்சம் வரையிலான நகைகளும், வாட்ச், நகைகளான வளையல், மோதிரம், செயின் ஆகியவை காணவில்லை என்பதை குறித்து அ.சா.ஆ.1 புகார் மனுவை காவல் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.முரளிதரண் என்பவரிடம் கொடுத்துள்ளார்.

6(ii). அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று உதவி ஆய்வாளர் திரு.முரளிதரண் அதற்கேற்ப நிலைய குற்ற எண் 162/2019 இ.த.ச பிரிவுகள் 457, 380–ன் கீழ் அ.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வழக்கு கோப்பை ஒப்படைத்ததையடுத்து அ.சா.9 திரு. சந்திரசேகர், காவல் ஆய்வாளர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்தக்கொண்டு, அதே நாள் காலை 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.2 சரவணன், அ.சா.3 பாண்டுரங்கன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.16 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.17 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

6(iii). பின்பு, சாட்சிகள் அ.சா.1 நியாஸ்அகமத், அ.சா.4 முகமது அலி, அ.சா.2 சரவணன், அ.சா.3 பாண்டுரங்கன், செல்வகுமார், முகமது ஜக்கி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து செய்துள்ளார். எதிரியை தேடி வந்த நிலையில் 13.04.2019ம் தேதி 15.00 மணிக்கு வாணியம்பாடி பாலாற்றில் உள்ள முனிஸ்வரன்

கோவில் ஆற்றங்கரை அருகில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது எதிரிளை சாட்சிகள் அ.சா.4 முகமது அலி, அ.சா.5 முகமது அஸ்லாம் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரிகள் கொடுத்த அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19 ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

6(iv) பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் மறைத்து வைத்திருந்த தங்க வளையல் ஒரு ஜதை 17.900 கிராம், சிறிய தங்க காசு இரண்டு –1 கிராம், கல் வைத்த வைர மோதிரம் 4.100 மிகி, சிறிய டாலர் ஒன்று –2.200 மிகி, சங்குமாடல் வைர கம்பல் ஒரு ஜதை –2.750 மிகி, குழந்தை மோதிரம் இரண்டு, நிக்கா கேமரா உறையுடன் ஒன்று, ஒமேகா லேடிஸ் வாட்ச் ஒன்று, டிசாரட் லேடிஸ் வாட்ச் ஒன்று ஆகியவற்றை அ.சா.ஆ.21 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியும், வாணியம்பாடி நகர பாலாற்றில் உள்ள செக்டேம் அருகில் உள்ள முட்புதரில் இருந்து அஸ்கர் அலி எடுத்து ஆஜர் செய்த தங்க காசு, கல்வைத்த வைர கம்பல் –1 ஜதை, பேன்சி டாலர்செயின், பேன்சி கம்பல் –1 ஜதை, ஒத்த கம்பல்ஒன்று –1.750 மிகி, ஒத்தகம்பல் ஒன்று சுமார் 0.870 மிலி, கல்வைத்த கவரிங் மோதிரம் ஒன்று, வாட்ச் போன்றவை அடங்கி எதிரி எடுத்து ஆஜர் செய்த 19 வகையான பொருட்களை அ.சா.ஆ.21 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியும், பின்பு கைரேகை நிபுணர்களுக்கு ஆய்வு செய்ய வேண்டி, எதிரிகளை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு நவீத்தின் நண்பர் முபாரக் என்பவர் கொடுத்த டெல்லிகட்டின் பவுன் செயின் ஒன்று அதன் எடை சுமார் 15.900 கிராம் அடங்கிய நகையை அ.சா.ஆ.22 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி, வழக்கு சொத்தை அ.சா.ஆ.23 முதல் அ.சா.ஆ.25 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். சாட்சிகள் அ.சா.4 முகமது அலி, அ.சா.5 முகமது அஸ்லாம், அ.சா.6 முபாரக், அ.சா.7 அனீஸ் அகமத், அ.சா.8 அம்ஜத்துல்லா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 457, 380–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை 2ம் எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது 2ம் எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், 2ம் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.</u>

8. இவ்வழக்கில் எதிரி கடந்த 05.04.2019ம் தேதி இரவு 07.00 மணியளவில் ஆசிரியர் நகரைச் சேர்ந்த அ.சா.1 நியாஸ் அகமது என்பவர் அவரது வீட்டை பூட்டிக்கொண்டு சாட்சி 2 முகமது ஜக்கி மற்றும் அவரது மனைவியுடன் உறவினர் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்னைக்கு சென்று இருந்தபோது, எதிரிகள் இருவரும் கெட்ட நோக்கத்துடன் சுயலாபம் கருதியும் 05.04.2019ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு சுமார் 11.30 மணிக்கு பூட்டி இருந்த அ.சா.1க்கு சொந்தமான வீட்டின் பின்பக்கமாக சென்று பின்பக்க கதவின் தாழ்பாளை 2 வது எதிரி அஸ்கர் அலி இரும்பு கம்பியால் நெம்பி உடைத்தும் எதிரிகள் இருவரும் வீட்டின் உள்ளே சென்று பிரோக்களில் இருந்த சாவிகளைக் கொண்டு திறந்து பணம் மற்றும் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட தனி நபர் சாட்சிகள் யாரும் எதிரி தான் குற்றம் புரிந்தார் என்பதனை நிரூபிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை

எதிரிக்கு அளித்து விடுதலை செய்ய வேண்டுமென வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

10. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 நியாஸ் அகமது அவர் கொடுத்த அ.சாஆ.1 புகார் மனுவில் " கடந்த 05.04.2019ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் அ.சா.1ம் அவரது மனைவி ஷாயிஸ்தா மற்றும் கன் முகமது ஜக்கியுடன் சென்னையில் உள்ள அவருடைய உறவினர் திருமண நிகழ்ச்சிக்கு சென்றதாகவும், பின்னர் மீண்டம் 08.04.2019ம் தேதி இரவு 11.00 மணிக்கு அவரது வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் பின் கதவு உடைக்கப்பட்டு, யாரோ திருடர்கள் உள்ளே சென்று வீட்டில் இரண்டு அறைகளில் உள்ள பீரோக்களை உடைத்து அதிலிருந்த பணம் ரூ.50,000/- மற்றும் நகைகள் கோல் காயின் மொத்தம்-7, செயின்-2, பிரேஸ்லெட்-1, மோதிரம்-10, நெக்லஸ்-1, மோதிரம்-9(அதில் 8 மோதிரம் வைரம் பதித்தது), 9 கம்மல்(அதில் 5 வைரம் பதித்தது) மொத்தம் சுமார் 20 சரவன் நகைகளும், Rolex watch-1. Omega Watch-1,Mont blanc power glass-1, Other watches-2, Nikon camera-1, Canon camera-1, Espri Watch - 1, Fosil Watch-1 ஆகியவைகளை யாரோ திருடர்கள் திருடி சென்றுள்ளார்" என புகார் மனு அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

11. புகார்தாரர் அ.சா.1 நியாஸ் அகமது அவரது நீதிமன்ற விசாரணையின்போது, "கடந்த 08.04.2019ம் தேதி நான் சென்னைக்கு போய்விட்டு வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டு உள்ளே வந்து கதவுகளும், பீரோவும் உடைக்கப்பட்டு சுமார் 7 முதல் 8 லட்சம் வரையிலான நகைகளும், வாட்ச், நகைகளான வளையல், மோதிரம், செயின் ஆகியவை காணாமல் போயிருந்தது " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது, புகாரானது கணினியில் தட்டச்சு செய்து அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் திருடுபோன நகைகளின் அடையாளங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் திருடுபோனவுடன் புகார் கொடுக்க சென்றபோது நகைகளை கண்டுபிடித்தவுடன் சொல்லி விடுவதாக சொல்லி அனுப்பினார்கள். எனது நகைகளை கண்டுபிடித்தவுடன்

எனக்கு தகவல் சொன்னார்கள். நகைகளை கண்டுபிடித்தவுடன் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் திருடுபோன அன்றே நான் போலிசாருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் சொன்னேன், போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். போலிசார் வந்து உடைக்கப்பட்டிருந்த பூட்டுகளை கைப்பற்றி எடுத்து வந்தனர். போலிசார் என்னை மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் " என சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 சரவணன், தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2019ம் வருடம் ஜே.கே. ஷோரூமில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எனது முதலாலிக்கு மதிய உணவு எடுத்து வர ஆசிரியர் நகரில் உள்ள அவரது வீட்டிற்க்கு சென்றேன். அங்கு சென்றபோது வீட்டின் உள்ளே நான்கைந்து நபர்களும், போலிசாரும் இருந்தனர் " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

13. பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 பாண்டுரங்கன் தனது நீதிமன்ற விசாரணையின்போது, "நான் 2019ல் ஜே.கே. கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். தேதி, மாதம் நினைவில்லை. 2019ம் வருடம் ஜே.கே. ஷோரூமில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எனது முதலாலிக்கு மதிய உணவு எடுத்து வந்தேன். அப்போது ஆசிரியர் நகரில் உள்ள அவரது வீட்டிற்க்கு வெளியே போலிஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் உள்ளே நான்கைந்து நபர்களும், போலிசாரும் இருந்தனர். அப்போது என்னிடம் போலிசார் கையொப்பம் கேட்டார்கள். நானும் கையொப்பம் செய்து கொடுத்தேன் " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

14. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4 முகமது அலி தனது நீதிமன்ற விசாரணையின்போது," அஸ்கர் அலி, த/பெ. ஜாவித் பாஷா, நவித் த/பெ.நசீர்பாஷா தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவர்கள் தான்

திருடியதாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரி அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான், அதை நான் எனது சகளை நியாஸ் அகமது வீட்டில் 13ம் தேதி திருடுபோனது. திருடர்கள் இரு நபர்களை போலிசார் பிடித்ததாக சொன்னார்கள். எங்கு பிடித்தார்கள் என்று தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டுக் கொடுத்தேன். எந்த இடம் என்று 4 வருடங்கள் ஆனதால் தற்போது நினைவில்லை. எதிரிகளை தெரியுமா என்றால் அவர்களை பிடித்ததற்கு பிறது நான் பார்த்தேன். ஆனால் அவர்களை தற்போது எனக்கு நினைவில்லை." என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது, நான் கையொப்பம் செய்த தாள்களில் மேற்படி விவரத்தை தவிர வேறு எந்த விவரங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். தற்சமயம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட 3 கையெழுத்துக்கள் தான் நான் போட்ட கையொப்பம் ஆகும். அதில் தற்சமயம் வேறு ஏதேனும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரங்கள் போலிசார்சொல்லியதின்பேரில் தான் தெரியும் என்றால் சரிதான், பிடித்த பிறகு நான் எதிரிகளை பார்த்தேன். என் முன்னிலையில் யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விவரம் எதுவும் சரியாக தெரியாது என்றால் சரிதான் " என சாட்சியம் அளித்துள்ளார்.

15. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 முகமது அஸ்லாம் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 2019ம் வருடம் எனது பக்கத்து வீட்டில் திருடுபோனது. அதற்காக போலிசார் வந்து விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதற்காக நான் போட்ட கையொப்பங்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் எதிரி அஸ்கர் அலி மற்றும் எதிரி நவீத்தின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 13.04.2019ம் தேதி 17.00 மணி மற்றும் 18.00 மணி குறிப்பிடப்பட்ட கைப்பற்றுதல்

மகசர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் உள்ள 4 கையெழுத்துகள் " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வழக்கு சொத்தை காவல் நிலையத்தில் ஒப்புவித்த சாட்சியான அ.சா.6 முபாரக் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " நவீத் தெரியுமா என்றால் தெரியாது, வழக்கு விசயமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

17. கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.7 அனீஸ் அகமத் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " என்னிடம் காட்டப்படும் 20.05.2019 14.30 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் எதுவும் என்னுடையது அல்ல, ஏதோ திருட்டு வழக்கிற்காக என்னை சாட்சியாக போட்டிருப்பதாக போலிசார் என்னிடம் கூறினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

18. கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.8 அம்ஜத்துல்லா தனது நீதிமன்ற விசாரணையின்போது, " என்னிடம் காட்டப்படும் 20.05.2019ம் வருடம் 14.30 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். காவல் நிலையத்தில் எனக்கு தெரிந்து ரியாஸ்பாய் வீட்டில் திருடு போனது சம்மந்தமாக சாட்சிக்காக என்னிடம் கையொப்பம் பெற்றார். எதற்காக என்று தெரியாது " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

19. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 திரு. சந்திரசேகர், காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று அதற்கேற்ப அ.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை குறித்தும், பின்பு அதே நாள் காலை 09.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.16 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.17 மாதிரி வரைபடம் தயார் செய்து குறித்தும், எதிரியை கைது செய்ததை குறித்தும், எதிரி கொடுத்த அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19 ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

முன்னிலையில் பதிவு செய்து, அதனடிப்படையில் வழக்கு சொத்தை அ.சா.ஆ.20 முதல் அ.சா.ஆ.22 வரையிலான கைப்பற்றுதல் மகஜர்கள் மூலம் கைப்பற்றி அ.சா.ஆ.23 முதல் அ.சா.ஆ.25 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதை குறித்தும், தனது புலன்விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. அ.சா.9ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், தனது அரசு பணியை சட்டப்படியாக செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

20. மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைந்து பார்க்கும்போது, புகார்தாரரான அ.சா.1 நியாஸ் அகமது அளித்த அ.சா.ஆ.1 புகார் மனுவில், 05.04.2019 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் தனது மனைவி மற்றும் உறவினருடன் சென்னைக்கு சென்றுவிட்டு, 08.04.2019 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் வீட்டிற்கு திரும்பி வந்தபோது, வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு, வீட்டினுள் இருந்த இரண்டு அறைகளில் உள்ள பீரோக்கள் உடைக்கப்பட்டு, பணம் ரூ.50,000/- மற்றும் பல்வேறு நகைகள் மற்றும் விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், அ.சா.1ன் நீதிமன்ற சாட்சியத்தை ஆராயும்போது, அவர் தனது புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள திருடுபோன நகைகளின் அடையாள விவரங்களை குறிப்பிடவில்லை என்று குறுக்கு விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், தனது நீதிமன்ற சாட்சியத்தில் திருடுபோன பொருட்களின் மதிப்பாக சுமார் ரூ.7 முதல் 8 லட்சம் என தெரிவித்துள்ளார். ஆனால், அ.சா.ஆ.1 புகாரில் திருடுபோன நகைகள் மற்றும் பொருட்கள் குறித்த விவரங்கள் வேறுபட்ட முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால், திருடுபோன பொருட்களின் தன்மை, எண்ணிக்கை மற்றும் மதிப்பு குறித்து புகாரிலும் நீதிமன்ற சாட்சியத்திலும் முக்கியமான முரண்பாடு இருப்பதாக நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.1 குறுக்கு விசாரணையில், திருட்டு நடந்த அன்றே காவல்துறையினருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்ததாகவும், காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து உடைக்கப்பட்ட பூட்டுகளை கைப்பற்றி

எடுத்துச் சென்றதாக தெரிவித்துள்ளார். இருப்பினும், காவல்துறையினர் தன்னை மறுவிசாரணை செய்யவில்லை என்றும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். குறிப்பாக, திருட்டு நடந்த உடனேயே சம்பவம் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், திருடுபோன பொருட்களின் அடையாளங்கள் மற்றும் உரிமை தொடர்பான தெளிவான விவரங்கள் அப்போதே பதிவு செய்யப்பட்டதாக எந்த உறுதியான சாட்சியமும் இல்லை என நீதிமன்றத்திற்குத் தெரியவருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில், **நகைகளை கண்டுபிடித்தவுடன் புகார் கொடுத்தேன்** என கூறியிருப்பது, அவர் அளித்த அ.சா.ஆ.1 புகார் மற்றும் திருட்டு நடந்த உடனேயே காவல்துறைக்கு தொலைபேசி மூலம் தகவல் அளித்ததாக கூறியுள்ள சாட்சியத்துடன் ஒத்துப்போகவில்லை. இவ்வழக்கில் வீட்டின் கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டிருந்ததாக அ.சா.1 கூறுவது மட்டும், எதிரி தான் அவ்வாறு உடைத்து வீட்டிற்குள் நுழைந்து பொருட்களை திருடினார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமானதாகாது. எதிரியை சம்பவத்துடன் நேரடியாக இணைக்கும் நேரடி சாட்சியம், நம்பத்தகுந்த சூழ்நிலைச் சாட்சியம் அல்லது பிற உறுதியான ஆதாரம் வழக்கில் போதுமான அளவில் நிரூபிக்கப்படவில்லை. எனவே, எதிரிகள் தான் வீட்டில் இரவு நேரத்தில் அத்துமீறி நுழைந்து திருட்டு செய்தார்கள் என்ற சந்தேகத்தை நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.

21. மேலும், கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 சரவணன், அ.சா.3 பாண்டுரங்கன் ஆகியோர்கள் முதலாளி வீட்டில் திருடுபோயிருந்தது பற்றி தெரியாது என்றும், சம்பவயிடத்தைப் பார்த்து வரைபடம் வரைந்ததற்கு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4.முகமது அலியின் நீதிமன்ற சாட்சியத்தை ஆராயும்போது, எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் தனது முன்னிலையில் பெறப்படவில்லை என்றும், தனது முன்னிலையில் எவ்வித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், காவல்துறையினர் கூறியதன் அடிப்படையிலேயே முதன்மை விசாரணையில் சாட்சியம் அளித்ததாகவும், காவல்துறையினர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க மகசர்களில் கையொப்பமிட்டதாகவும், வழக்கு விவரம் தனக்கு சரியாகத் தெரியாது என்றும் குறுக்கு விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளதாலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 முகமது அஸ்லாம் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரிகள் அஸ்கர் அலி, நவீத் இருவரும் சேர்ந்து பல இடங்களில் திருடியதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்ததற்கு சாட்சி கையொப்பங்கள் செய்தேனா என்றால் இல்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், வழக்கு சொத்தை காவல் நிலையத்தில் ஒப்புவித்த சாட்சியான அ.சா.6 முபாரக் வழக்கு விசயமாக எதுவும் தெரியாது என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.7 அனீஸ் அகமத் அவரது சாட்சியத்தில், கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் எதுவும் அவருடையது அல்ல, ஏதோ திருட்டு வழக்கிற்காக அவரை சாட்சியாக போட்டிருப்பதாக போலிசார் அவரிடம் கூறியதாகவும், போலிசார் அவரை விசாரிக்கவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.8 அம்ஜத்துல்லா அவரது சாட்சியத்தில், ரியாஸ்பாய் வீட்டில் திருடு போனது சம்மந்தமாக சாட்சிக்காக என்னிடம் கையொப்பம் பெற்றார் என்றும், எதற்காக என்று தெரியாது என என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பில் அ.சா.1 நியாஸ் அகமது வீட்டில் திருடி சென்றதாக சொல்லப்படும் நகை, பணம் மற்றும் பொருட்கள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகத்தை நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8ன் சாட்சியத்தின் மூலம் எதிரிகள்தான் அ.சா.1 நியாஸ் அகமது வீட்டின் பீரோவை உடைத்து அதில் இருந்த நகை, பணம் மற்றும் பொருட்களைத் திருடிச் சென்றார் என்பதை குறித்தும், திருடுபோன நகைகள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதனையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை. எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டை தீர்மானிக்க இயலாது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 457, 380—ன் கீழான குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம்

செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

22. <u>**முடிவாக**</u> இவ்வழக்கில் 2ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 457, 380–ன்கீழான குற்றங்களை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரி கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. **(1ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்டு சி.சி.எண்.286/2025 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது)**

23. இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சி.சி.286/2025 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் சி.பி.எண்.188/2019 மற்றும் சி.பி.எண்.208/2019 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்துகள் குறித்த உத்தரவு அந்த வழக்கின் முடிவில் பிறப்பிக்கப்படும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>பிற்சேர்க்கை</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. நியாஸ்அகமத் | புகார்சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு. சரவணன் | கேள்வியுற்ற சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 3. | அ.சா.3 | திரு. பாண்டுரங்கன் | பார்வை மகசர் சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.முகமது அலி | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு.முகமது அஸ்லாம் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.முபாரக் | வழக்கு சொத்தை காவல் நிலையத்தில் ஒப்புவித்த சாட்சி |
| 7. | அ.சா.7 | திரு. அனீஸ் அகமத் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 8. | அ.சா.8 | திரு.அம்ஜத்துல்லா | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 9 | அ.சா.9 | திரு. சந்திரசேகர், காவல் ஆய்வாளர். | புலன் விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 09.04.2019 ஆம் தேதியிட்ட புகார்மனு. | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | வழக்கு சொத்தின் புகைப்படங்கள்–5 | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | சி.டி | அ.சா.1 |
| 4. | அ.சா.ஆ.4 | 09.04.2019ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | 09.04.2019ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம். | அ.சா.2 |

| | | | |
|---|---|---|---|
| 6. | அ.சா.ஆ.6 | 14.04.2019ம் தேதியிட்ட அஸ்கர் அலி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| 7. | அ.சா.ஆ.7 | 14.04.2019ம் தேதியிட்ட நவீத் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| 8. | அ.சா.ஆ.8 | 13.04.2019ம் தேதி 17.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| 9. | அ.சா.ஆ.9 | 13.04.2019ம் தேதி 18.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.4 |
| 10. | அ.சா.ஆ.10 | 14.04.2019ம் தேதியிட்ட அஸ்கர் அலி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.5 |
| 11. | அ.சா.ஆ.11 | 14.04.2019ம் தேதியிட்ட நவீத் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.5 |
| 12. | அ.சா.ஆ.12 | 13.04.2019ம் தேதி 17.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.5 |
| 13. | அ.சா.ஆ.13 | 13.04.2019ம் தேதி 18.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம். | அ.சா.5 |
| 14. | அ.சா.ஆ.14 | 13.04.2019ம் தேதியிட்ட கைப்பற்றுதல் | அ.சா.8 |

| | | | |
|---|---|---|---|
| | | மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம். | |
| 15. | அ.சா.ஆ.15 | 09.04.2019ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.9 |
| 16. | அ.சா.ஆ.16 | 09.04.2019ம் தேதியிட்ட பார்வை மகசர். | அ.சா.9 |
| 17. | அ.சா.ஆ.17 | 09.04.2019ம் தேதியிட்ட மாதிரி வரைபடம். | அ.சா.9 |
| 18. | அ.சா.ஆ.18 | 14.04.2019ம் தேதியிட்ட நவீத் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டப் பகுதி மட்டும். | அ.சா.9 |
| 19. | அ.சா.ஆ.19 | 14.04.2019ம் தேதியிட்ட அஸ்கர் அலியின் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டப் பகுதி மட்டும். | அ.சா.9 |
| 20. | அ.சா.ஆ.20 | 17.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர். | அ.சா.9 |
| 21. | அ.சா.ஆ.21 | 18.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர். | அ.சா.9 |
| 22. | அ.சா.ஆ.22 | 20.05.2019ம் தேதி 14.30 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர். | அ.சா.9 |
| 23. | அ.சா.ஆ.23 | 20.05.2019ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.9 |
| 24. | அ.சா.ஆ.24 | 13.04.2019ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.9 |
| 25. | அ.சா.ஆ.25 | 03.05.2019ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.9 |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றுப் பொருட்கள் மற்றும் சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.